# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
# அசல் வழக்கு எண். 63/2006

**பி.சா.4- குறுக்கு விசாரணை** - நாள் 21/07/2022,
பெயர் = **கார்த்திகேயன் பி.சா.4**
பி.சா.4 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி வாதி தரப்பில் கு.வி.-

என்னுடைய வயது என்னவென்றால் 58 ஆகும், 27/02/1964ல் நான் பிறந்தேன். பிறந்த 10 வருடங்கள் கழித்து 1974ம் ஆண்டிலிருந்துதான் எனக்கு குடும்ப விசயங்கள் தெரியவரும் என்றால் 15 வருடங்களில்தான் தெரியும். பொதுவாக குடும்பப் பெரியவர்கள் செய்யும் காரியத்தை பொதுவாக சிறியவர்களிடம் சொல்வதில்லை என்றால் சரிதான். 1980க்கு முன்னர் குடும்பத்தில் நடந்த விஷயங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தை ஜெயவிலாஸ் குடும்பம் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். ஜெயவிலாஸ் குடும்பத்தைப் பற்றி 1980க்கு முன்னர் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். தாவாச் சொத்து பாலையம்பட்டி ஜமீனுக்கு உட்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவாச் சொத்துக்கு ஜெயவிலாஸ் குடும்பம் பெயரில் கிரையப்பத்திரம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். ஜெயவிலாஸ் குடும்பத்தில் பெண் வாரிசுகள் எங்களுக்கும் சொந்தில் பங்கு வேண்டும் என்று கேட்டு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு விருதுநகர் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதில் நான் மற்றும் எனது சகோதர சகோதரிகளும் பிரதிவாதிகளாக இருந்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் அந்த வழக்கில் ஆண் வாரிசுகள் ஆவோம் என்றால் சரிதான். ஆண் வாரிசுகள், பெண் வாரிசுகளுக்கு பங்கு கிடையாது என்று கட்சி செய்கிறோம் என்றால் சரிதான். இந்த தாவாச் சொத்து விருதுநகர் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பாகவழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து எனது தகப்பனாருக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் அந்தப் பாகவழக்கில் சேர்க்கப்படவில்லை என்று சாட்சி தன்னிச்சையாக சொல்கிறார். எனது தகப்பனார் பெயரில் கிரையப் பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. என் அப்பா பெயரில் "அ" பதிவேட்டில் உள்ளது என்கிறார் சாட்சி. இதேபோன்று என் தகப்பனாருடன் உடன் பிறந்தவர்களான வாதி உட்பட அவரது சகோதரர்களுக்கு "அ" பதிவேட்டின் படி சொத்து உள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ஒவ்வொரு சகோதரர் பெயரிலும் உள்ள "அ" பதிவேட்டிற்கு பின்னர் ஒவ்வொரு சகோதரர்களும் அவரவர் பெயரில் தனித்தனியாக பட்டா பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. என் அப்பாவின் சொத்துக்களை எல்லாம் எங்கள் குடும்பத்தில் பாகம் செய்துவிட்டோம் என்றால் சரிதான்.

தாவாச் சொத்து எனது அப்பா பெயரில் இருந்தது என்பது எனக்குத் தெரியாது என்று சொன்னால் 1993வரை தெரியாது என்கிறார் சாட்சி. எனது சித்தப்பா வாதி தினகரனிடம் வேலைபார்த்தக் கொண்டிருந்த கோபால் தினகரன் என்பவர் வேலையில் இருந்து பணிஓய்வு பெற்று எங்கள் குடும்பத்தில் வேலைக்கு வந்தார் என்றும், அவர் சொல்லித்தான் "அ" பதிவேட்டில் எனது தகப்பனார் பெயர் உள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியும் என்றும் சொன்னால் சரிதான். அந்த கோபால் தினகரன் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் அமர்ந்துள்ள மேற்படி கோபால் தினகரனை சாட்சி அடையாளம் காட்டினார். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை நான் சொல்லி தயார் செய்து, படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வாதி, பிராதில் தாவா சர்வே எண்ணின் ஒரு பகுதியை சாலைவிரிவாக்கத்திற்காக தன்பெயரில் எடுக்கப்பட்டு அதற்கு நஷ்டஈடு தான் பெற்றுள்ளதாகவும், சொல்லியுள்ளார் என்றும், அதற்கு நான் எதிர்வழக்குரையில் வாதியே அதை நிரூபிக்க வேண்டுமென்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதி, தான்தான் நஷ்டஈட்டுத் தொகையை வாங்கினேன் என்பதை நிரூபீத்தால் அதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதேபோன்று எனது அப்பாவின் சொத்தும் நிலஆர் ஜிதம் செய்யப்பட்டது என்று சொன்னால் எனக்குத் தெரியாது. வாதி, வா.சா.ஆ.1 முதல் 21 வரை குறீயீட்டுள்ள ஆவணங்களின்படி தாவா சர்வே எண்ணில் உள்ள நிலஎடுப்புக்கான நஷ்ட ஈட்டை வாதிதான் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இதே நில ஆர்ஜிதத்தில்தான் தாவா சர்வே எண்ணுக்கு அருகில் உள்ள என் தந்தையின் சர்வே எண்ணுக்கும் நில ஆர்ஜிதம் நடந்து எனது தந்தை நஷ்ட ஈடு பெற்றுக் கொண்டார் என்றால் எனக்குத் தெரியாது. எனது தந்தை கடந்த 1986ம் வருடம் இறந்துவிட்டார் என்றும், அவர் இறப்பிற்குபின் வாதிதான் எங்கள் குடும்பத்தை கவனித்து வந்தார் என்றும் அதனால் நில ஆர்ஜிதம் பற்றி எனக்குத் தெரியாது என்று சாட்சி தன்னிச்சையாக சொல்கிறார். இந்த விவரங்களை எனது எதிர்வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வா,சா,ஆ, 18 மூலமாக எனது தந்தை அவரது நிலம் ஆர் ஜிதம் செய்யப்பட்டது குறித்து சிவகங்கை நீதிமன்றததில் வழக்கு நடந்து அதில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி சூரியன், வாதியிடம் தாவா இடத்தை பதிவு குத்தகை எடுத்து அதில் பெட்ரோல் பங்க் ஆரம்பித்த விழாவிற்கு நானும் சென்றிருந்தேன் என்றால் சரிதான். எனக்கு பேருந்துகளும், கார்களும் உள்ளன என்றால் சரிதான். மேற்படி பேருந்துகள், கார்களுக்கு 1ம் பிரதிவாதியின் பெட்ரோல் பங்கில்தான் பெட்ரோல், டீசல் போடுவோம் என்றால் அங்கேயும் போடுவோம், வேறு இடங்களிலும் போடுவோம். 1993ல் எங்களுக்கு தாவாச் சொத்து எங்களது தகப்பனார் பெயரில் உள்ளது என்பது தெரிவதற்கு முன் முப்பது ஆண்டுகள் முன்பு வரை வாதி தினகரன் தான் தாவாச் சொத்தை அனுபவம் செய்து

வந்தார் என்றால் சரிதான், சாட்சி, பின்னீட்டு அவர் தாவாச் சொத்தை பராமரித்துத்தான் வந்தார் என்று சாட்சி தன்னிச்சையாக சொல்கிறார். பி.சா.ஆ.18 ஆவணத்தை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவாச்சொத்திற்கு வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் வாதிக்குத்தான் சொத்து உள்ளது என்று வாதி சொன்னதால் அப்படி இல்லை என்று நிரூபிப்பதற்காக மேற்படி ஆவணத்தை நான் தாக்கல் செய்திருக்கிறேன். பி.சா.ஆ.18 ஐப் பற்றி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. தாவா சர்வே எண் எனக்குத் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. தாவாச் சொத்திற்குரிய பழைய சர்வே எண் 205/4 என்றால் அது எனக்குத் தெரியாது. பி.சா.ஆ.14 ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்று கேட்டால் வாதியின் தகராறு உள்ள இடத்திற்கு வடக்கே, தெற்கே, கிழக்கே என்னுடைய இடம் உள்ளது என்பதை காட்ட தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.24ம், பி.சா.ஆ.4ம் ஒரே ஆவணம் என்றால் சரிதான், மேற்படி ஆவணத்தின் அடிப்படையில்தான் சர்வே ஆதரவுகள் எங்களுக்கு வருவாய்துறையால் வழங்கப்பட்டுள்ளன என்றால் சரிதான் என்று நினைக்கிறேன். நான் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரையத்தின் அடிப்படையில் அவர் பெயரில் பட்டா மாற்றிக் கொண்டார் என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா மாற்றம் அன்றைய கோட்டாட்சியர் பணிமாறுதலான அன்று உத்தரவு போட்டுச் சென்றார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த கோட்டாட்சியர் பிறப்பித்த பட்டா மாறுதல் உத்தரவு இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா மாற்ற உத்தரவை அவர் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஒரு உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளபோது பட்டா மாற்றம் செய்ய வருவாய்துறையினருக்கு அதிகாரம் இல்லை என்று வாதி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேரணை தாக்கல் செய்து அதில் தீர்ப்பானது என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி நீதிப்பேராணை மனுவில் நான் 8ம் எதிர்மனுதாரராக இருந்தேன் என்றும், அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜரானேன் என்றும் சொன்னால் எனக்குத் தெரியாது. தாவாச்சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்று நான் எதிர்கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். எனக்கு தாயாரும், ஒரு சகோதரியும் இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் பி.சா.ஆ.4 கிரைய ஆவணத்தை 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்று மேற்படி பி.சா.ஆ. 4 ஆவணத்தை பார்வையிட்டு சாட்சி சொல்கிறார். 14-02-1970ல் எங்கள் குடும்பத்தில் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை நடைபெற்றது தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.24 மற்றும் பி.சா.ஆ.4 கிரையப்பததிரத்திறகு முன்பு எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட எந்த பாகபத்திரத்திலும் தாவாச் சொத்து இடம் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். பின்பு சாட்சி யோசித்துவிட்டு சரிதான் என்று நினைக்கிறேன் என்கிறார். எங்களுடைய

குடும்பத்தில கடன் தொல்லைகள் அதிகமானதால் வாதியின் சொத்துக்களை உரிமையில்லாத பிரதிவாதிகள் மற்றும் பிற சகோதரர்களும் மோசடி பத்திரம் மூலமாக ஏமாற்றுகிறார்கள் என்றால் அதை மறுக்கிறேன்.

மறுவிசாரணை -

கோபால் தினகரன் எனது தகப்பனரரின் சகலை. அவருடைய மனைவியும் எனது தாயாரும் உடன் பிறந்தவர்கள்.

குறுக்கு விசாரணை - இல்லை.

8ம்பிரதிவாதி தரப்பில் கு,வி, இல்லையென தெரிவிக்கப்பட்டது.